**கம்பனிகள் நிதியம் 2015**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 479(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமனங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் மரத் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனிகளின் ஏலமிடல் மூலம் கிடைத்த ரூபா 132,925 தொகையான பணம் ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த சொத்துக்களை இனங்கண்டு அவற்றின் கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வு ஆகியவற்றை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்குரியதான 2015 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 628,210 தொகையான திறைசேரி முறிகளுக்கான வட்டிப் பணம் 2015 ஆம் ஆண்டிற்கான வட்டியாக கணக்கீடு செய்தமையால் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் அந்த தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 131(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம், ஒவ்வொரு கம்பனியாலும் செலுத்த வேண்டிய வருடாந்த அறிக்கை வருமானங்களில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கம்பனிகள் நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை வருமானம் ரூபா 418,826,666 ஆக இருந்தது. எனினும், அந்த பணத்தொகை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான பெறவேண்டிய நிலுவை வருடாந்த அறிக்கை வருமானமாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 628,239,996 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 237 இன் பிரகாரம், உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்ப நிபுணர் ஒருவரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் எனினும், பதிவேட்டு அறைக்காக கொள்வனவு செய்யப்பட்ட CCTV கெமரா உரிய முறையில் பொருத்தப்பட்டு செயற்படுவதாக சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 5,346,000 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 400,693,933 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 385,906,579 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 14,787,354 அல்லது 3.8 சதவீதத்தால் முன்னேற்றம் அடைந்திருந்தது. திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் வட்டி வருமானம் ரூபா 49,176,610 இனால் குறைவடைந்திருந்த போதிலும், நிதியத்தின் ஏனைய வருமானம் ரூபா 57,035,471 இனால் அதிகரித்தமை மற்றும் நிறுவக மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 6,023,120 இனால் குறைவடைந்தமை மேற்படி நிதி விளைவிலான அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிதி விளைவினைப் பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 269,443,580 தொகையான மிகையானது கிரமமாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 400,693,933 ஆகியிருந்தது. ஊழியர் வேதனம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்கு செலுத்திய வரி ஆகியவற்றை கருத்திற்கொள்ளும் போது நிறுவனத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 276,571,736 ஆக இருந்ததுடன், அது தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 412,576,129 ஆகியிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் நிதியத்தின் செயற்பணியானது அரசின் பொருளாதார கொள்கைக்கும் வர்த்தக கொள்கைக்கும் இணக்கப்பாடொன்று ஏற்படும் வகையில் உரிய அதிகாரச்சட்டங்களின் கீழ் முயற்சிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான சட்டரீதியான நிலைமையொன்றினை வழங்குவதற்கும், அவற்றின் பணிகளை கிரமப்படுத்துவதற்கு உழைத்தலுமாகும். இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம், சங்கங்களுக்கான கட்டளைகள் சட்டம் (123 ஆம் அதிகாரம்), 1935 இன் 61 ஆம் இலக்க சீட்டு கட்டளைச் சட்டம் மற்றும் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச் சட்டம் போன்ற கட்டளைச் சட்டங்களினை நடைமுறைப்படுத்தல் இடம்பெறுகிறது.

மேற்படி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த பணிகளின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 170(1) ஆம் பிரிவிற்கு இணங்க நிதி அறிக்கைகளை பதிவு செய்யவேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 7076 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான நிதி அறிக்கைகளை பதிவு செய்த கம்பனிகளின் எண்ணிக்கை 2,509 ஆக இருந்தமையால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மொத்த வருமானம் ரூபா 2,509,000 ஆக இருந்ததுடன், அவற்றுள் கம்பனிகள் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 1,672,666 ஆகும். எனினும் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிதி அறிக்கைகளை பதிவு செய்ய வேண்டிய கம்பனிகள் இனங்காணப்பட்டு அவற்றின் நிதி அறிக்கைகள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்குரிய வேலைத்திட்டமொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை.

(ஆ) கம்பனிகள் அதிகாரச்சட்டத்திற்கமைய வரையறுக்கப்பட்ட கம்பனிகளை பதிவுசெய்தல் மற்றும் அதில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் பணிகளை செயற்படுத்தல் மற்றும் அதன் பிரகாரம் செயற்படுவதனை உறுதிப்படுத்திக்கொள்ளல், அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் செயற்பாடுகளை கம்பனிகள் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல், கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு கம்பனிகள் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட பணியொன்றான போதிலும், பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் செயற்பாடுகளை கண்காணிப்பு செய்வதற்கான செயல்முறை வேலைத்திட்டமொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பதிவேட்டு அறை

திணைக்களத்தின் பதிவேட்டு அறையில் 100,000 கம்பனிக் கோவைகளும், 20,000 சங்கங்களின் கோவைகளும், 30,000 ஏனைய கோவைகளும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன், நாளாந்தம் பரிமாற்றப்படும் கோவைகளின் எண்ணிக்கை 800 முதல் 1000 மற்றும் அதற்கு மேலதிகமாக நாளாந்தம் சேர்கின்ற கோவைகளின் எண்ணிக்கை 40 இற்கும் 50 இற்கும் இடைப்பட்டதாகும்.

இதற்கான போதியளவு இடவசதி பதிவேட்டு அறையினுள் இல்லாதிருந்ததுடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றின் பிரகாரம் பாதுகாப்பாக கோவைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பதிவேட்டு அறையில் போதியளவான உத்தியோகத்தர்களின் இணைப்புச் செய்யப்பட்டிராததுடன், தனியார் பாதுகாப்பு சேவையின் மூன்று உத்தியோகத்தர்கள் அந்த கடமைகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். பதிவேட்டு அறையின் உப பிரதிகள் (Bacups) வைத்துக்கொள்வதற்கான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வரையறுக்கப்பட்ட கம்பனிகளை கலைத்தல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் கோவைப்படுத்தப்படாமல் கம்பனிகளின் பெயர்களின் பதிவழித்தல் இடம்பெறுவதுடன் அதன் போது,

பெயர் பதிவழிக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பில் அறவிடப்பட முடியாத நிலுவை வருமானம் மொத்த நிலுவை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிராததுடன், கலைத்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த வேண்டிய முறையான பதிவேடுகள் பயன்படுத்தப்படாமல் தற்காலிக பதிவேடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 2007 ஆம் ஆண்டின் போது பொதுக் கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 90,275,000 தொகைக்ககாக இது வரையிலும் எதுவித இலாபப் பங்கும் கம்பனி நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. 2013 சனவரி 02 ஆந் திகதிய அமைச்சரவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இந்தக் கம்பனி 2013 ஆண்டு முதல் நட்டமடைந்திருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், மேற்படி முதலீடு செய்யப்பட்ட பணம் மற்றும் அதற்குரிய நலன்களை மீண்டும் கம்பனிக்கு பெற்றுக்கொள்வதற்காக இது வரையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டுச் தொழிற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பணிகளை கணனி மயப்படுத்துவதற்காக மென்பொருளொன்றை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் பழைய ஆவணங்களை ஸ்கேன் செய்து கோவைப்படுத்துவதற்காக ரூபா 3,863,750 தொகை கம்பனிகள் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. விசேடமாக தயாரிக்கப்பட்ட 54,000 கோவைகள் (four holes files) செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறாமையால் சாதாரண கோவைகளாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டில் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 90 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிதியத்தினால் அதனது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும் பிரிவும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்படுகின்ற காலம் என்பன தெளிவாக காட்டப்பட்டிருக்கவில்லை. 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வரவு, செலவு விடயங்கள் உள்ளடங்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 20 சதவீதத்திலிருந்து 137 சதவீதம் வரையிலான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**5.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மூன்று வருடக் காலப்பகுதிக்குரிய எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் பட்டியல்படுத்தப்பட்டிராததுடன், அது மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.11 ஆம் பந்தியின் பிரகாரம் பிணைப் பொறுப்புக்களை பெற்றுக்கொள்ளாமல் கணனிமயப்படுத்தும் செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்தமையால் தோல்வியடைந்த ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா 13,268,430 தொகையினை அறவிட முடியாது போயிருந்தது. அவ்வாறே 2015 யூலை 21 ஆந் திகதிய அமைச்சரவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் மென்பொருள் உருவாக்கம் மற்றும் மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான மீண்டும் விலைக்கேள்வி கோருவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (அ)(1) பிரிவின் பிரகாரம் இயலுமான வரையில் ஆகக்குறைந்த கால எல்லையினுள் விலைக்கேள்விகள் மதிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும், ரூபா 261,960 செலவிடப்பட்டு காசு எண்ணும் இரு இயந்திரங்கள் கொள்வனவு செய்தல், ரூபா 58,000 பெறுமதியான புள்ளி அணி அச்சுப் பொறியொன்றை (DOT Matrix) கொள்வனவு செய்தல் மற்றும் ரூபா 687,232 பெறுமதியான 10 UPS களை கொள்வனவு செய்தல் ஆகியவற்றின் போது குறிப்பிடத்தக்க காலம் தாமதிக்கப்பட்டு விலைக்கேள்விகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது விசேடமாக அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் அவ்வப்போது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயப் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்காமை |
| | (ii) சொத்துக்களை அகற்றும் போது முறையாக பதிவுசெய்தல் மற்றும் கணக்கீடு செய்யப்படாமை. |
| | (iii) மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளை கணக்குகளில் பதிவு செய்யும் போதும், ஆண்டின் இறுதியில் செலவினங்களை அட்டுறு செலவினங்களுக்கு எடுக்கும் போது உரிய பேரேட்டு பதிவுகளை பயன்படுத்தாமல், மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | வருமானங்களை அறவிடல் | (i) 2008 சனவரி முதல் 2015 ஆம் ஆண்டு வரை நிலவும் நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கான நடைமுறையொன்று நிறுவனத்தில் தாபிக்கப்பட்டிராமை.<br><br>(ii) உள்ளபடியான செயற்பாட்டிலுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை, செயற்படாத கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் செயற்படாத சங்கங்களின் எண்ணிக்கை தொடர்பில் சரியான தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக முறையான கணனி முறைமையொன்று இல்லாதிருந்தமையால் நிதியத்தினால் சேகரிக்கக்கூடிய வருமானம் தொடர்பில் சரியாக இனங்காண முடியாதிருந்தமை. |
| (இ) | கொள்வனவு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படாமை. |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 56 வெற்றிடங்கள் நிலவுவதுடன், இது நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தமை. |